விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

கலயாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



சங்கு 23
ஒலி 093 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை (22.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக

# தேசிய கொள்கை ஒன்று வகுக்க வேண்டும்

### மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு) உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட பல தரப்பு மாநாட்டை கூட்டி நிலையான அபிவிருத்திக்காக திட்டமொன்றை வகுப்பதன் முக்கியத்துவம் மற்றும் ஏனைய 13 விடயங்களை உள்ளடக்கிய வகையில், மல்வத்து அஸ்கிரிய தேரர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)



## அதிகார பகிர்வே

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு

### கோட்டாவுக்கு விக்னேஸ்வரன் கடிதம்



(கொழும்பு) பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு அதிகாரப் பகிர்வில்தான் தங்கியுள்ளது என நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விக்னேஸ்வரன் எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளாார். (15ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியுடனான சந்திப்பை

## த.தே.கூட்டமைப்பு புறக்கணிக்க வேண்டும்

### உறவுகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்) ஜனாதிபதியுடனான சந்திப் பினை தமிழ்த் தேசி யக்கூட்டமைப்புபாராளு 15

## எதிர்பார்க்காத அளவு மின்கட்டணம் உயரும்

### மக்களால் அதனை தாங்க முடியாது

### இராஜாங்க அமைச்சர் தயாசிறி

(கொழும்பு) மின்கட்டணத்தை உயர்த்தும் யோசனையின் கீழ் எதிர்பார்க் காத அளவு மின்சார கட்டணம் அதிகரிக்கக்கூடும் என இராஜாங்க அமைச்சர் 15

### எரிசக்தி அமைச்சரின்

## சாரதி படுகொலை

(கொழும்பு) எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகேயின் சாரதி நேற்று மாலை கெஸ்பேவ வில் உள்ள அவரது 15

## அரசுக்கு வாக்களித்த நாம் இறுதியில் வீதியில் அநாதரவாகியுள்ளோம்



### எரிபொருளுக்காக வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு) நாட்டில் எரிபொருளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவு 15

## அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை

### அமைச்சரவையில் யோசனை

(கொழும்பு) அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அறி விக்குமாறு அமைச் 02

### பொருளாதார நெருக்கடி தொடர்பில்

## ஜனாதிபதி தலைமையில் ஆளும் கட்சியின் கூட்டம் இன்று

(கொழும்பு) ஆளும் கட்சியின் விசேட கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பு இன்று மாலை 6.00 மணியளவில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின் 15

## என்னை மன்னித்து விடுங்கள்

### வரிசையில் காத்திருக்கும் மக்களிடம் இராஜாங்க அமைச்சர் ரொஷான்



(கொழும்பு) எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் காத்திருந்து கஷ்டப் படும் மக்களிடமும் உரப் பிரச் சினையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமும் தாம் மன்னிப்பு கோருவதாக இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிசிக்கு...

சரவை கூட்டத்தில் யோசனை முன்வைக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக முதல் தடவையாக 70 ஆயிரம் மெற்றிக் டன் நெல்லை அறுவடை செய்ய முடிந்தது.

7 ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வாறு 70 ஆயிரம் மெற்றிக் டன் அறுவடை செய்யப்பட்டது.

எனினும் இதனை கொள்வனவு செய்ய முற்பட்டபோது அவர்கள் விலையை அதிகரித்தனர்.

இதனால், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை கொண்டு வருமாறு இடம் பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்படும்.

அரிசி விலையை அதிகரிப்பதற்காகவே இவ்வாறு நெல்லுக்கான விலையை அதிகரிக்கின்றனர்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் சகல அரிசியும் வெளியில் கொண்டு வரப்படும்.

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் குறைந்த விலையில் அரிசியை விநியோகிக்க முடியும்.

அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமே தெரிவித்துள்ளார். (ம)

## என்னை...

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது பல பிரச்சினைகள் உள்ளன.

தற்போது மக்கள் அரசாங்கத்தை தூற்றுகின்றனர். இதுவே உண்மையான விடயம் என்பதோடு அதனை மறைத்து எந்த பயனும் இல்லை.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சரிடம் சென்று எமக்கும் சகல விடயங்களும் சரியாக இடம்பெறுகின்றன எனவும் சிறப்பாக இடம்பெறுகின்றன எனவும் கூற முடியும்

ஆனால் எத்தனை நாட்களுக்கு இவ்வாறு ஆம் என்று கூறிக் கொண்டிருக்க முடியும்.

நுகர்வோர், விவசாயிகள், கடற்றொழிலாளர் மற்றும் அரச சேவையாளர்கள் உள்ளிட்ட சகலரும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

அழுத்தங்களை பிரயோகித்து மக்களை வழிநடத்த முடியாது.

மக்களின் பிரச்சினைகளுக்கும் செவிசாய்த்து செயற்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். (ம)


## மணமகள் தேவை

1985.11.29இல் பிறந்த சொந்த தொழில் புரியும்
மிருகசீரிடம் 2ஆம் பாதம் உடைய
மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

(C-4031)

**076 806 9155**


# ஈர விழிகளுடன்
## ஓராண்டு நினைவுத்தடம்



ஆரம்பக்கல்வி முன்னோடி ஆசிரியர்
யாழ். இந்து ஆரம்பச் சொத்து


அமரர்
**வேலுப்பிள்ளை அன்பழகன்** அவர்கள்

கண்நிகர் கல்வியைக் காசினிக் களித்து
காவியப் புகழுடை காவலனாகியே
பண்பட நின்ற மாணவர் கூட்டமும்
பயின்ற நல்லாசிரியர் மரபும்
விண்ணுற மதிப்பில் பற்றுற நிற்க
விளைந்த நுண்துகள் நோயது தாக்கி
கண்பட்டுப் போனதோ சடுதியாய் சென்ற
காரியம் புரிந்திடா தழு தோம்
உன்பற்றில் என்றும் உள்ளமும் வாழும்
ஒன்றுடை ஆண்டென்ன வந்திடு ஆண்டுகளென்றும்

நீங்கா நினைவில்
இணைந்து பயணித்த அதிபர்கள், ஆசிரியர்கள்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

(10725)

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 – 08 – 1940

மறைவு 21 – 03 – 2022

## சுப்பிரமணியம் நடராசா

**( ஓய்வுநிலை மின்னியலாளர் - நகரசபை, சாவகச்சேரி )**

சாவகச்சேரி, கிராம்புவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராசா அவர்கள் நேற்று (21.03.2022) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் கைலாயபிள்ளை - காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் மகாலட்சுமி, காலஞ்சென்ற தியாகராசா, விசயலட்சுமி, சிவராசா, பாக்கியராசா, தனலட்சுமி, காலஞ்சென்ற மகேந்திரராசா, நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராணி, ஜெயக்குமார் (தபாலகம் - சாவகச்சேரி), ஜெயலலிதா, பாலகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரவெட்டி), லிபன் (இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகத்தர் - பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரராசா (ஓய்வுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் - தென்மராட்சி வலயம்), மங்களேஸ்வரி (ஆசிரியை - யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை), பாலசுப்பிரமணியம், திருவாணி (ஆசிரியை - யா/ சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), மயூரதி ஆகியோரின் அன்பு மாமனாரும் யதீசன், யபோசன், சுஹேசினி, காருசன், கீர்த்தனன், கிரிஜா, திவ்வியா, கிஷானி, தர்சனா, திருசிகன், அருண்யன், அருணியா, கேஷாந், அபினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.03.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4028)

கிராம்புவில்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்


# பதவி வெற்றிடம்

## யாழ். எழில் இணைய வானொலி

யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ். எழில் இணைய வானொலிக்கு

- ➡ அறிவிப்பாளர்கள்
- ➡ சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
- ➡ குரல் வழங்குனர்கள்

ஆகிய பணிகளுக்கான வெற்றிடம் உள்ளது.

- அறிவிப்பாளர்களாக இணைய விரும்புபவர்கள் முழுநேர அறிவிப்பாளர்களாக அல்லது பகுதி நேர அறிவிப்பாளராக இணைந்து கொள்ளலாம்.
- அறிவிப்புத்துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**மாணவர்களும் பயிற்சியாளர்களாக இணைந்து கொள்ளலாம்.**

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் அலுவலக நேரங்களில் எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

(C-4030)

**077 730 4545 / 021 222 4550**


# மரண அறிவித்தல்



## செல்லையா செகராசசேகரம்

தோற்றம் : 06.08.1937
மறைவு : 21.03.2022

துன்னாலை தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தாமரைக் குளத்தடி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செகராசசேகரம் அவர்கள் நேற்று (21.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயசீலன் (பொறியியலாளர் - கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்), கீதா (ஆசிரியை - ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் பாடசாலை), சத்தியசீலன் (பிராந்திய முகாமையாளர், கற்றன் நசனல் வங்கி, கிழக்கு மாகாணம்), கிரிஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ். மாநகர சபை), காலஞ்சென்ற தர்மசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சத்தியபாலன் (வலயக்கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி) ச.நீரஜா (பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி, சங்கானை), பா. பிரபாகரன் (ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் - மத்திய மருந்தகம், கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெ. சாரங்கி, ஜெ. புருசோத்தமன், ச. சாயீசன், ச. ஷாருமி, ச. ஷாமிக்கா, பி. நதிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் செல்லத்துரை, பரஞ்சோதி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், தம்பையா, பரராசசேகரம், பாக்கியலட்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.03.2022) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4027)

தாமரைக் குளத்தடி,
துன்னாலை, கரவெட்டி.

077 778 1047

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறிக் கொள்கை நாட்டை வீழ்த்தும்

## இதற்கு இலங்கையின் கொடுங்கோலாட்சி சாட்சியம்

## செந்தமிழன் சீமான் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் பெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு சிங்கள இனவாத அரசுகளின் கொடுங்கோன்மை ஆட்சியும், இனவெறிச் செயற்பாடுகளுமே காரணம் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தன் நாட்டின் குடிகள் மீது இன ஒதுக்கல் பாகுபாட்டைச் செய்து, அவர்களை அந்நியப்படுத்தும் வகையிலான பிரித்தாளும் சூழ்ச்சிகளைக் கையிலெடுத்து, ஒட்டுமொத்த மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்தாது, இனவெறிக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒரு நாடு வீழும் என்பதற்கு சமகாலத்தில் இலங்கை ஒரு சாட்சியாகத் திகழ்கின்றது.

தமிழீழத் தாயகத்திற்கு ஒரு நாட்டுக்கான சர்வதேசிய அங்கீகாரம் கிடைக்கப்பெற்று, தலைவர் பிரபாகரன் நிர்வாகத் தலைவராகவே முழுநேரமும் இயங்கும் வாய்ப்பு மட்டும் வரலாற்றில் வாய்க்கப் பெற்றிருந்தால் உலகின் தலைசிறந்த வல்லாதிக்க நாடுகளுள் ஒன்றாக தமிழீழம் திகழ்ந்திருக்கும் என்பது எவரும் மறுக்க முடியாத பேருண்மையாகும்.

தலைவர் பிரபாகரன் நினைத்திருந்தால் அமெரிக்காவின் மூலமாகவோ, சீனாவின் மூலமாகவோ தமிழீழ நாட்டைப் பெற்று அதன் ஜனாதிபதியாக ஆகியிருக்க முடியும்.

ஆனால், அவ்வாறு செய்ய தென முடிவெடுத்தால் பிறிதொரு நாட்டின் சார்போடு இயங்க வேண்டியிருக்கும்; பூகோள ரீதியாக இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்றதுமல்ல என்றுணர்ந்து, அம்முடிவுகளை எடுக்காது முற்றாகத் தவிர்த்தார் தலைவர் பிரபாகரன்.

உலக வல்லாதிக்க நாடுகளின் துணையோடு பெரும் பெரும் தொகைகளைக் கடனாகப் பெற்று இலங்கை அரசு சண்டையிட்டபோது, தனது மக்களின் உழைப்பில் தன்னில் தாங்கும் தன்னிறைவான பொருளாதாரத்திலேயே படையைக் கட்டிப் போர் புரிந்தார் தலைவர் பிரபாகரன்.

ஆனால், உலகமெங்கும் ஓடோடிச்சென்று, தமிழர்களுக்கெதிரான அணிசேர்க்கை செய்து, பாரிய அளவிலான தொகையில் கடன்களைப் பெற்று, தமிழர்களின் இனப்படுகொலையை அரங்கேற்றியது சிங்கள அதிகார வர்க்கம். ஒட்டுமொத்த நாட்டு மக்களைக் குறித்து துளியும் கவலையற்று தமிழர்களுக்கெதிரான இன அழிப்பையே முழுமையாக முன்னிறுத்திய சிங்கள ஆட்சியாளர்கள், எந்தெந்த நாடுகளுக்கெல்லாம் ஓடோடிச்சென்று கடன்களைப் பெற்றார்களோ, இன்றைக்கு அந்த நாடுகளுக்கெல்லாம் கடனாளியாக மாறி நிற்கிறார்கள்.

உலக நாடுகளுக்கெல்லாம் கடனாளியாக மாறிய மெக்சிக்கோ நாட்டின் கொடிய நிலை இலங்கைக்கும் ஏற்படலாமென எச்சரிக்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

உள்நாட்டின் அந்நியச்செலாவணி கையிருப்பு குறைந்துவிட்டதால், பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள், உணவுப்பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் என யாவற்றிற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு, அவை இன்று கட்டுக்கடங்காத அளவில் விலையுயர்ந்துள்ளன. மின்சாரத்தட்டுப்பாட்டால் நாளொன்றுக்கு 7 மணிநேரம் வரை மின்வெட்டு நடைமுறையில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சமையல் எரிபொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதால் உணவகங்களும் மூடப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாக, பணவீக்கமும், அதிகப்படியான கடன் விகிதமும் அந்நாட்டின் பொருளாதாரத்தை முற்றாகக் கேள்விக்குறியாக்கி, நாட்டின் எதிர்காலத்தையே பாழாக்கியிருக்கின்றன.

தற்போதைய சூழலில் இந்தியா போன்ற அண்டை நாடுகளிடம் கடன்களைப் பெற்று, நிலைமையை ஓரளவுக்குச் சரிகட்ட முயன்றாலும், மிகப்பெரும் பொருளாதாரச்சரிவைச் சந்தித்துள்ள அந்நாடு மீள்வதற்கான வாய்ப்புகள் அரிதாகிக் கொண்டிருக்கின்றன.

அயல்நாட்டுக்காக உள்நாட்டின் சட்டதிட்டங்களிலே மாற்றம் கொண்டு வருகிற அளவுக்கு இலங்கையை மெல்ல மெல்ல சீனா விழுங்கிக் கொண்டு வரும் வேளையில், தற்போதைய சூழல் சீனாவின் ஆதிக்கத்துக்கு முழுவதுமாக வழி திறந்துவிட்டிருக்கிறது.

"ஆசியாவின் எழுச்சியை சீனாவால்தான் ஏற்படுத்த முடியும்" என சிங்கள ஆட்சியாளர்கள் வெளிப்படையாகக் குரலெழுப்பும் அளவுக்கு சீனாவின் கொலனி நாடாக இலங்கை மாறி நிற்கையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மட்டுமல்லாது இந்தியாவுக்கும் பேராபத்தாகும்.

இந்நிலையில், இலங்கை அரசுக்கு 7,500 கோடி ரூபாய் கடனைத் தற்போதும், 3,750 கோடி ரூபாய் கடனைக் கடந்த மாதமுமென வழங்கியிருக்கும் இந்திய நாட்டின் செயற்பாடுகள் அதிர்ச்சியளிக்கின்றன.

இந்தியா எனும் நாட்டின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலானவற்றைச் செய்யும் விதமாக சீனாவோடு உறவு கொண்டாடுவதும், மறுபுறம் இந்தியாவின் குடிகளான தமிழக மீனவர்களைக் கோரப்படுகொலை செய்வதுமான கொடும் போக்குகளில் ஈடுபட்டு வரும் இலங்கையுடன் இந்தியா நட்புறவு கொண்டாடுவதும், கடன்களை வாரி வழங்குவதும் வெட்கக்கேடானது.

ஈழப்பேரழிவை நிகழ்த்தி, தமிழின மக்களைக் கொன்றுகுவித்த சிங்கள ஆட்சியாளர்களைக் காப்பாற்ற சர்வதேச மன்றத்தில் துணை நிற்கும் இந்தியப்பெருநாடு, தற்போது வரையிலும் அவர்களோடு ஒத்திசைந்து செல்வது மிகத் தவறான முன்னுதாரணம். தமிழர்களுக்கு விளைவிக்கும் பச்சைத் துரோகம்.

ஆகவே, இந்திய ஒன்றியத்தினுடைய பிராந்திய நலன்களுக்கு முற்றாக எதிர்த்திசையில் பயணித்து, சீனாவோடு இணக்கமாக இருக்கும் இலங்கை நாட்டையும், அதன் ஆட்சியாளர்களையும் எச்சரிக்காமல், அவர்களை அரவணைத்து அனுசரித்துச் செல்லும் போக்கு, வருங்காலங்களில் இந்தியாவுக்கு மோசமான பின்விளைவுகளை பூகோள ரீதியாக ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## சர்வகட்சிக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்க விக்னேஸ்வரன் எம்.பியும் முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட்டியுள்ள அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கு பற்ற மாட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடிக்கான தீர்வும் அதிகாரப் பகிர்வில்தான் தங்கியுள்ளது என்பதையும் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (நி)



## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாய்த்தர்க்கம் கத்திக்குத்தாக மாறியது

(கொழும்பு)

நிட்டம்புவ பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து 29 வயதுடைய ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் எடுக்க வந்த மோட்டார் சைக்கிள் சாரதிக்கும் முச்சக்கரவண்டி சாரதிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறே இந்த சம்பவத்திற்கு காரணமாகியுள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

# சர்வகட்சி மாநாடு சஜித் அணி புறக்கணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணிப்பதாக அக் கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதா? அல்லது அதைப் புறக்கணிப்பதா? என்பது தொடர்பான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்தை எடுப்பதற்காகக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன் போது பெரும்பான்மையான உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பது என ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என ஜே.வி.பியினரும் மற்றும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ ஆகியோரின் கட்சிகளும் தீர்மானித்துள்ளன. (நி)

## அன்னை பூபதியின் 34 ஆவது ஆண்டு நினைவு மட்டக்களப்பில் நினைவேந்தல்



(மட்டக்களப்பு)

ஈழத்தில் இந்தியப் படைகளின் தமிழினப் படுகொலைகளுக்கெதிராக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 34 ஆவது வருட நினைவேந்தல் மட்டக்களப்பில் அமைந்துள்ள அன்னை பூபதி நினைவிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நொதேண் வி.கழகம் நடாத்திய காந்தி ஞாபகார்த்த மென்பந்து போட்டி

## நோர்த் சென்சரி கிற்றேஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

நொதேண் விளையாட்டுக் கழகம் நடாத்திய காந்தி ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப் போட்டியில் நோர்த் சென்சரி கிற்றேஸ் சம்பியன் ஆகியுள்ளது.

அண்மையில் செங்குந்த இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற மேற்படி சுற்றுப் போட்டியில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இதில் நோர்த் சென்சரி கிற்றேஸ் மற்றும் ஜெப்னா ஸ்ராக்ஸ் விளையாட்டுக் கழகங்கள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தன.

பரபரப்பாக நடைபெற்ற மேற்படி இறுதிப் போட்டியில் நோர்த் சென்சரி கிற்றேஸ் அணி சம்பியனாகியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் ந.கந்தவனச்செல்வன் கலந்து சிறப்பித்ததோடு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் நொதேண் விளையாட்டுக் கழகத்தால் பயனாளிகள் பலருக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)






**நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் தெய்வேந்திரம் கிரிதரனின் வழிகாட்டலில் நாகலிங்கம் கிருஷ்ணதாசனின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி இல்லத்திற்கு ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2541

### அத்வைதா



பஞ்ச பாண்டவர்கள்



பஞ்சம் வர ஆண்டவர்கள்

### சரவணன்

எந்த குறுஞ்செய்தியும் அனுப்பவில்லை



சரியான நேரத்தில் வந்து சேர்ந்தான் நண்பன் 90's Kids என்பது வரம்

### அர்ச்சனா

உறங்குவது போல நடிக்கும் குழந்தையிடம் பிடித்ததே...



'தூங்கிட்டியா' எனக் கேட்டால் ஆமாம் என்று பதில் தருவதுதான்.....

### செந்தில்

கல்யாண மண்டபத்தில்



பெண்கள்
புடவை நல்லா இருக்கு-ன்னு யாருமே சொல்லமாட்றாங்களே.....



ஆண்கள்
பந்தி எங்க நடக்குதுன்னு யாருமே சொல்ல மாட்றாங்களே.. நான் என்ன பண்ணுவேன்..

### பார்வதி

இளங்காற்று வீசுதே....






இளங்காற்று எங்கம்மா வீசுது அனல்காற்றுதான் வீசுது

### ஆதி

தேவையில்லாத விஷயத்தில் தலையிட்டால் இப்படித்தான் நடக்கும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்த, கோட்டாவால் தமிழர் மனதை வெல்லவே முடியாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

**“தமிழ் மக்களின் மனதை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவாலும் ஒருபோதும் வெல்லவே முடியாது. எனவே, தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு அவர்கள் இருவரும் சென்றால் அங்குள்ள மக்களால் விரட்டியடிக்கப்படுவார்கள்” என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சில இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே சரத் பொன்சேகா எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதே மகிந்த ராஜபக்ஷவை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வெறுத்து விட்டார்கள்.

அந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கில் எனக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. அதற்காக வடக்கு மக்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் மனதை வெல்ல வேண்டும் என்பதற்காகவே அங்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்தார்.

எனினும், பிரதமரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள மக்கள் வீதிகளில் போராடி அவரை விரட்டியடித்துள்ளனர் என சரத் பொன்சேகா தெரிவித்தார். (நி)

# மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை அளித்து எரிவாயுவை விநியோகிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

மருத்துவமனைகளுக்கு முன்னுரிமையளித்து தேவையான எரிவாயுவை விநியோகிக்குமாறு எரிவாயு பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படுவதை தடுப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு, அனைத்து மருத்துவமனைகளின் பணிப்பாளர்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

# தங்கத்தின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு தங்கத்தின் விலை நேற்று திங்கட் கிழமை அதிகரித்துள்ளது.

அன்றைய விலை நிலவரத்தின் படி 24 கரட் தங்கப் பவுணின் விலை 161,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அத்துடன் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 149,000 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (நி)



கொழும்பு பல்கலைக் கழக மருத்துவ பீடத்தினதும் இந்நாட்டின் முதலாவது சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பினதும் 150 ஆவது ஆண்டுநிறைவை முன் னிட்டு, 20 ரூபாய் பெறு மதியுள்ள இரண்டு புதிய நினைவு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நினைவு நாணயங்களை வழங்கி வைத்தனர். மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், பிரதி ஆளுநர் என்.டி.ஜி.ஆர் தம்மிக நாணயக்கார, நிதி அதிகாரி கே.எம் அபேகோன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


## 31ம் நாள் நினைவஞ்சலி

யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் விசேட கல்வி
ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி.**வினித்தா இராகுலன்** அவர்களின் அன்புத் தந்தை



**அமரர்.கருணாகரன் ரதீஸ்வரன்** அவர்கள்

2022.02.21 அன்று
இறைபதம் அடைந்தமையையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (0717)

விசேட கல்விப் பிரிவு-
யாழ்ப்பாணம் கல்வி வலயம், யாழ்ப்பாணம்.


# இராசிபலன்

**22.03.2022**
**பங்குனி 08, செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தி முற்பகல் 8.26 மணிவரை**
**பஞ்சமி பின்னிரவு 6.17 மணிவரை**

**விசாகம் முன்னிரவு 9.59 மணிவரை**
**சுபநேரம்- 10.47-12.17 மணிவரை**
**இராகுகாலம் -3.17-4.47 மணிவரை**

**சந்திராஷ்டமம்-**
**ரேவதி, அச்சுவினி**

**வளவன்**



**மேஷம்**

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலம் சீராகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**ரிஷபம்**

உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.



**மிதுனம்**

உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



**கடகம்**

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.



**சிம்மம்**

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், கௌரவம், அந்தஸ்து உயரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



**கன்னி**

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணியாளர் தொல்லை அகலும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாக்கு [illegible]



**துலாம்**

பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.



**விருச்சிகம்**

தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களை எளிதில் எளிதில் செய்து முடிப்பீர்கள்.



**தனுசு**

இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப கௌரவம் கூடும் நாள்.



**மகரம்**

செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.



**கும்பம்**

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், தொலைபேசி வழித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும்.



**மீனம்**

வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், பிரயாண பயமுண்டு, எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது.

**காலத்தின் அருமை அறிந்தவர் அதை வீணாக்க மாட்டார்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புற்றுநோய் நிபுணர்கள் சங்கத் தலைவராக யாழைச் சேர்ந்தவர் நியமனம்



(யாழ்ப்பாணம்)
சார்க் நாடுகளின் புற்றுநோய் நிபுணர்களின் சங்கத் தலைவராக மஹரகம தேசிய புற்றுநோய் மருத்துவ மனையின் புற்றுநோய் மருத்துவ நிபுணர் நடராஜா ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சார்க் நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த சனிக்கிழமை இணையவழி ஊடாக இடம்பெற்ற தலைவர் தெரிவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது மஹரகம தேசிய புற்றுநோய் மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர் நடராஜா ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டார். (5-6-104)

## விபத்தில் ஒருவர் படுகாயம்

(அராலி)
வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோட்டார் சைக்கிள் வேலி கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.


குறித்த சம்பவம் நேற்று முன்தினம் சங்கானைப் பகுதியில் இடம்பெற்றது. குறித்த சம்பவத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 24 வயதான இளைஞர் ஒருவரே படுகாய மடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

படுகாயமடைந்த நபர் அம்புலன்ஸ் உதவியுடன் யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6-104)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் ப.நோ.கூ. சங்கங்கள் சந்தை வியாபாரிகள், தனியார் வியாபாரிகள் உட்பட நிறுத்தல் கருவிகளுக்கு இன்று 22 ஆம் திகதி முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை பரிசோதித்து முத்திரையிடப் படவுள்ளது என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் அறிவித்துள்ளார். (5-6)

## விபத்தில் ஆட்டோ சாரதி காயம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் பாரதியார் சிலைக்கு அண்மையில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் காய மடைந்துள்ளார்.

பருத்தித்துறை வீதியில் யாழ் நோக்கி பயணித்த மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்த குறித்த நபர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (6-5)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)
மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட, உரிமை கோரப்படாத பொருட்கள் எதிர்வரும் 24,25,31 ஆம் திகதிகளில் காலை 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள் ளன.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு, மணல், கல், மண் தவிர்ந்த ஏனைய பொருட்கள் நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும். அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.


24.03.2022 - கல், மண், மணல் ஏலவிற்பனை, 25.03.2022 - துவிச்சக்கர வண்டிகள் ஏல விற்பனை, 31.03.2022 - பயன்படுத்தக் கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத மோட்டார் சைக்கிள் கள் என்பன ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன. (5)



கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நந்தாவில் கற்புலத்து மனோன்மணி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்- ரவிசாந்)



தேனி சஞ்சிகை மற்றும் தேனி இணையதளத்தின் ஆசிரியர் அமரர் கணேஷ் கெங்காதரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் எழுவைதீவு தோமையார் முன்பள்ளிக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி) ஜேர்மன் கிளையின் நிதிப் பங்களிப்பில் குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)



158 ஆவது பொலிஸ் வீரர்கள் தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பொலிஸ் தலைமையகங்களில் இடம்பெற்றன. (படங்கள்- கஜிந்தன், சதீஸ்)



தும்பளை கிழக்குப் பகுதியில் வசித்து வரும் முன்னாள் போராளி குடும்பத்திற்கு கொழும்பு றோயல் கல்லூரியின் 1990 ஆம் ஆண்டு தமிழ் பிரிவு மாணவர்களின் 1.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.இதில் வட மாகாண இராணுவ கட்டளைத் தளபதியும், யாழ் மாவட்ட இராணுவ பாதுகாப்பு கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் செனரத் ஜாப்பா வீட்டை கையளித்தார். (படம்- மகாலிங்கம்)

## போதை மாத்திரைகளுடன் யாழில் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண நகரப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உப பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 3000 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (5-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியில் இருந்து மீள சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குச் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைக் கட்டாயம் பெற வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டு மக்கள் தற்போது கடும் நெருக்கடியில் உள்ளனர். அரசு மீது கடும் எதிர்ப்பை வெளியிடவும் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலைமை நீடித்தால் மக்கள் போராட்டத்தில் இறங்குவார்கள். எனவே, இப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என மைத்திரி தெரிவித்தார். (நி)

# குடிநீர் போத்தல் விலைகளும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மாத்திரமின்றி அத்தியாவ சியமற்ற பொருட்களின் விலைகளும் நாளாந்தம் சடுதியாக அதிகரித்து வருகின்றன.

நாட்டில் நிலவும் பாரிய டொலர் நெருக்கடிக்கு மத்தியில், அதன் பெறுமதி அதிகரித்து வருகின்ற நிலையில் அதற்கு நிகராக இவ்வாறு பொருட்களின் விலை களும் உயர்வடைந்து செல்கின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலாகும் வகையில் குடிநீர் போத்தல்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய 1.5 லீற்றர் குடிநீர் போத்தலின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 120 ரூபாவாக உயர் வடைந்துள்ளது. மேலும் 5 லீற்றர் தண்ணீர் போத்தலின் விலை 300 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளது. (நி)

# எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த முதியவர் உயிரிழப்பு

## இதுவரை நால்வர் பலி



(கொழும்பு)

மீரிகமவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளு க்காக வரிசையில் காத்திருந்த 76 வயதான முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எரிபொருளை நிரப்பிவிட்டு தனது முச்சக்கர வண்டிக்கு திரும்பிக் கொண்டிருந்த போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை எரிபொருள் வரிசையில் நின்று மூன்று பேரும் தகராறு ஏற்பட்டதால் ஒருவரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் அமர்வில் இலங்கை பிரதிநிதிகள் பங்கேற்பு

(ஜகர்த்தா)

சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் 144 ஆவது அமர்வு இந்தோனோஷியாவின் பாலியில் இடம்பெற்று வருகின்றது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான இலங்கை பாராளுமன்ற குழுவும், குறித்த அமர்வில் பங்கேற்றுள்ளது.

குறித்த குழுவில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பாராளுமன்ற உறுப்பி னர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், காவிந்த ஜயவர்தன, ராஜிகா விக்ரமசிங்க ஆகியோர் பங்கேற்றுள்ளனர். (நி)

# பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் மாநாடு தாய்லாந்து பிரதமர் இலங்கை வருகை

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் .

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே வெளிவிவகார அமைச்சர் தகவலை வெளியிட்டார். "இலங்கை, இந்தியா, தாய்லாந்து உட்பட 7 நாடுகள் அங்கம் வகிக்கும் பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் தாய்லாந்து பிரதமர், கொழும்பு வந்து, அடுத்த தலைமைப் பதவியை ஏற்பார். ஏனைய தலைவர்கள் 'ஒன்லைன்' மூலம் மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அத்துடன், பிம்ஸ்டெக் அமைப்பில் உள்ள நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பு மார்ச் 29ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்" என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார். (நி)


# வெளிவந்து விட்டது

SLEAS போட்டிப் பரீட்சைக்கு வழிகாட்டும்

கலாநிதி பா.தனபாலனின்

"கல்வி முகாமைத்துவத்தில் விடய ஆய்வு"



வெளியீடு:
குமரன் புத்தக இல்லம்
கொழும்பு
சென்னை




- விடய ஆய்வுக்கற்கை அணுகுமுறைகள்
- கல்வி நிர்வாக சேவை கடந்தகால போட்டிப் பரீட்சை (SLEAS) வினாத்தாள்கள் விடைக்குறிப்புக்களுடன்
- ஆசிரிய கல்வியியலாளர் சேவை போட்டிப்பரீட்சை வினாத்தாள் விடைக்குறிப்புக்களுடன்
- அதிபர் சேவை போட்டிப்பரீட்சை வினாத்தாள் விடைக்குறிப்புக்களுடன்
- கல்வியியல் விடய ஆய்வு மாதிரி வினாத்தாள் விடைகளுடன்
- தீர்மானம் மேற்கொள்ளல், தலைமைத்துவம் , கல்வி முகாமைத்துவ தந்திரோபாயங்கள், சூழ்நிலை முகாமைத்துவம்,செயற்றிட்டங்கள், பிரச்சினை தீர்த்தல் விடயங்களை உள்ளடக்கிய நூல்.

(10716)

**கிடைக்குமிடங்கள்**

I. ஸ்ரீலங்கா புத்தகசாலை
இல.234 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

II. புக்லாப்- யாழ் பல்கலைக் கழகம்
முன்பாக- திருநெல்வேலி

III. குமரன் புத்தக இல்லம்,
T.P- 011 236 4550


# வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்களை மூடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் 2 தூதராங்க ளையும், ஒரு துணைத் தூத ரகத்தையும் மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைக்கான உயர்ஸ்தா னிகர் அலுவலகம், தூதரகம் மற்றும் துணைத்தூதரகங்களை நடத்தி செல்வதற்கான செலவீனத்தை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் பக்தாத் மற்றும் நோர்வேயின் ஒஸ்லோ நகரங்களில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்கள் இரண்டை மூடுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவுஸ்திரேலி யாவில் உள்ள துணைத் தூத ரகம் என்பனவற்றை எதிர் வரும் 31ஆம் திகதி முதல் மூடுவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (நி)

# சீனாவிடம் இருந்து 1.5 பில்லியன் டொலர் நிதி உதவி கோரியது இலங்கை

(கொழும்பு)

சீனாவிடம் இருந்து 1.5 பில்லியன் டொலர் நிதி உதவியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது என இலங்கை க்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை 2.8 பில்லியன் டொலர்களை சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு சீன வங்கிகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமான கடனை இல ங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## குழந்தைகளை அடிப்பது வேல்ஸில் சட்டவிரோதமானது

(லண்டன்)

வேல்ஸில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அடிப்பது நேற்று திங்கட்கிழமை முதல் சட்டவிரோதமானது.

'குழந்தைகளுக்கு இது ஒரு வரலாற்று நாள்' என முதலமைச்சர் மார்க் டிரேக்ஃபோர்ட் தெரிவித்துள்ளார். இதன்மூலம் வேல்ஸ் உடல் தண்டனையை தடை செய்யும் இரண்டாவது பிரித்தானிய நாடாகிறது.

தங்கள் பராமரிப்பில் இருக்கும் குழந்தையை யாரேனும் அடித்தால் அவர்கள் கைது செய்யப்பட்டு தாக்குதலுக்காக வழக்குத் தொடரப்படலாம்.

2020 ஆம் ஆண்டு நவம்பரில் ஸ்கொட்லாந்து சட்டவிரோதமான முதல் பிரித்தானிய நாடாக மாறுவதற்கு முன்பு, ஏப்ரல் 2020 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தீவுகளின் முதல் பகுதியாக ஜெர்சி இருந்தது.

1979 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு உடல் ரீதியான தண்டனையை தடை செய்த உலகின் முதல் நாடாக சுவீடன் ஆனது.

இப்போது உலகம் முழுவதும் 63 நாடுகளில் இது சட்டவிரோதமானது. (நி)

## 133 பேருடன் சென்ற சீன பயணிகள் விமானம் மலையில் மோதி விபத்து





(பீஜிங்)

தெற்கு சீனாவில் 133 பேருடன் சென்ற சீனா ஈஸ்டர்ன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான போயிங் 737 ரக விமானம் விபத்துக்குள்ளானது.

குன்மிங் நகரிலிருந்து குவாங்சோவுக்கு பறந்து கொண்டிருந்த போது குவாங்சி மாகாணத்தில் உள்ள மலையில் விழுந்து விமானம் விபத்துக்குள்ளானது என சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

விபத்து நடந்த இடத்திற்கு அருகில் மீட்புக் குழுக்கள் அனுப்பட்டுள்ள போதும் உயிரிழப்புகள் மற்றும் சேதம் குறித்து இதுவரை தெரிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## உக்ரைனுக்கு ஆதரவாக ரஷ்யாவில் போராட்டம் இதுவரை 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது



(மொஸ்கோ)

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதற்கு சொந்த நாட்டிலேயே எதிர்ப்பு வலுத்து பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உக்ரைன் மீது கடந்த 24 ஆம் திகதி ரஷ்யா தாக்குதலை தொடங்கியது. கிரிமியாவை தன்னுடன் இணைக்க ரஷ்யா தாக்குதல் நடத்தியதுபோல், இதுவும் எளிதாக முடியவடை யும் என ரஷ்யா மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், தாக்குதல் நீண்டு கொண்டே செல்கிறது.


ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் கடுமையாக தடை களை விதித்துள்ளதால், ரஷ்யாவில் அத்தியாவசிய பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது.

இதனிடையே உக்ரைன் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யாவில் பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் அவர்களை கைது செய்து போராட்டத்தை ஒடுக்கி வருகின் றனர்.

நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட 936 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த மாதம் 24 ஆம் திகதியில் இருந்து தற்போது வரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

## போருக்கு மத்தியில் போலந்து விரையும் பிடன்



(வோஷிங்டன்)

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையில் போர் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் போலந்துக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நேட்டோ உறுப்பினரான போலந்தின், எல்லைப் பகுதியில் அமைந்துள்ள உக்ரைனில் தாக்குதல் இடம்பெற்று வருவது அந்நாட்டிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், உக்ரைனில் இருந்து வரும் அகதிகள் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால் போலந்து பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ரீதியில் பெரும் அச்சுறுத்தலை சந்தித்து வருகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் 25 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் போலந்து நாட்டிற்கு செல்லவுள்ளார்.

இந்த பயணத்தின் போது போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரிச் டூடாவை ஜோ பிடன் சந்தித்து ஆலோசனை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதோடு உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் மற்றும் போலந்தில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்ற விவகாரங்களுக்கு மத்தியில் போலாந்திற்கு ஜோ பிடன் பயணம் மேற்கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (நி)

## ஒருபோதும் சரணடைய மாட்டோம் நிராகரித்தது உக்ரைன்

(கீவ்)

உக்ரைன் - கிழக்கு துறைமுக நகரமான மரியுபோல் ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள உக்ரைனிய படைகள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு சரணடைய வேண்டும் என ரஷ்யா விதித்த நிபந்தனையை உக்ரைன் நேற்று உடனடியாக நிராகரித்தது.

ரஷ்யப் படைகளிடம் எமது படைகள் சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என உக்ரைன் துணைப் பிரதமர் இரினா வெரேஷ்சுக் தெரிவித்துள்ளார்.

சரணடைதல், ஆயுதங்களை கீழே வைப்பது என்ற பேச்சுக்கு இடமில்லை. இதை நாங்கள் ஏற்கனவே ரஷ்ய தரப்பிற்கு தெரிவித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மரியுபோல் நகரம் ரஷ்ய முற்றுகைக்குள் உள்ள நிலையில் அங்குள்ள உக்ரைனிய படையினர் ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடைய வேண்டும்.

ஆயுதங்களைக் கீழே போடும் அனைவரும் மரியுபோலில் இருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என பாதுகாப்பு நிர்வாகத்திற்கான ரஷ்ய தேசிய மையத்தின் பணிப்பாளர் கேணல்-ஜெனரல் மிகைல் மிஜின்ட்சேவ் பாதுகாப்பு அமைச்சால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஒரு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கொரே... என்ப... உலக...

(ஜெனிவா)

கொரோனாத் ...
படுவது போலியா...
துள்ளது.

கொரோனா வைரஸ் தொடர்பில் தற்போது பல்வேறு போலியான தகவல்கள் பரவி வருவதாகவும் ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது உலகம் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரானா குறைவடைந்து விட்டது

# பதில் உண்மையில்லை

## க சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

**தொற்றின் தாக்கம் குறைவடைந்து விட்டதாகக் கூறப்**
**ான கருத்தாகும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்**




பரவி வரும் ஒமிக்ரோன் திரிபானது பலவீனமான வைரஸ் திரிபாகும், அத்துடன் இந்த கொரோனா திரிபானது கடைசித் திரிபாகும் என்பது போலியான கருத்துக்களாகும்.

இவ்வாறான தவறான கருத்துகள் உலக வாழ் மக்கள் மத்தியில் ஒரு நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில், கொரோனா தொற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதே சிறந்த தீர்வாகும்.

மேலும் கொரோனாத் தொற்று தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)



## ரஷ்யாவுக்கு எதிராக கண்டனம் தெரிவிக்க சீனா மறுப்பு

(வோஷிங்டன்)

ரஷ்யாவுடன் சீனா நல்ல நட்புறவை விரும்புவதாக அமெரிக்காவிற்கான சீனத் தூதர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவிற்கு சீனா பொருள் உதவி வழங்கினால், அந்நாடு கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று கடந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் எச்சரித்திருந்தார்.

ரஷ்யாவிற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மேறகத்தேய நாடுகள் மற்றும் ஜப்பானுடன், சீனாவும் இணைந்து கொள்ள வேண்டும் என்று உக்ரைனும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்துள்ள அந்நாட்டிற்கான சீனத் தூதர் கிங் ஆங், ரஷ்யாவிற்கு எதிராக சீனா தெரிவிக்கும் கண்டனப் போரை தடுக்க உதவாது என தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று மட்டுமே சீனா வலியுறுத்தும் என அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவுடன் அண்டை நாடு என்ற முறையிலும் நட்பு ரீதியிலும் உறவுகளை சீனா விரும்புவதாகவும், ரஷ்யாவுடன் வர்த்தகம், பொருளாதாரம், நிதி, எரிசக்தி துறைகளில் சீனாவின் ஒத்துழைப்பு தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## திருவிழாவிற்கு சென்றவர்கள் மீது கார் மோதியதில் ஆறு பேர் பலி

(பிரஸ்ஸல்ஸ்)

தெற்கு பெல்ஜியத்தில் திருவிழாவிற்கு சென்றவர்கள் மீது கார் மோதியதில் சுமார் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகர் பிரஸ்ஸல்ஸ்"க்கு தெற்கே சுமார் 30 மைல் தொலைவில் உள்ள சிறிய நகரமான ஸ்ட்ரெபி-ப்ராக்வெக்னிஸில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இந்த சம்பவம் நடந்துள்ளது.

பாரம்பரிய அணிவகுப்பில் பங்கேற்க தயாராகிக் கொண்டிருந்த மக்கள் மீது கார் அதி வேகமாகச் சென்று மோதியது.

இந்த விபத்தின் போது, சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர். மற்றும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக நகர மேயர் ஜாக் கோபர்ட் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் ஒவ்வொரு ஆண்டும் ஈஸ்டர் தினத்துக்கு முன்பாக 'கார்னிவேல்' திருவிழா கோலாகலமாக கொண்டாடப்படுவது வழக்கம்.

### பெல்ஜியத்தில் சோகம்



கொரோனாத் தொற்று காரணமாக பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் கடந்த 2 ஆண்டுகளாக கார்னிவேல் திருவிழா நடைபெறவில்லை. இந்த நிலையில் பெல்ஜியத்தில் நேற்று முன்தினம் கார்னிவேல்' திரு விழா கொண்[illegible]து.

2 ஆண்டுகள[illegible] நடைபெறும் இந்த திருவிழாவில் ஆர்வத்துடன் பங்கேற்க நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு குவிந்தனர்.

அவர்கள் அலங்கார ஆடைகளை அணிந்தும், மாறு வேடங்கள் தரித்தும் ஆடிப் பாடியபடி [illegible] இதன் போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது. (நி)

## பீரங்கிக் குண்டுகளை பரிசோதித்த வடகொரியா

(சியோல்)

வடகொரியா பீரங்கி குண்டுகளை வானில் வீசி பரிசோதனை மேற்கொண்டுள்ளதாக நேற்று முன்தினம் தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து அடுத்தடுத்து வீசப்பட்ட 04 பீரங்கிக் குண்டுகள் கடலில் விழுந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா, தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளைத் திரும்பப் பெறுவதற்கு அமெரிக்காவிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும், அண்டை நாடுகளை அச்சுறுத்தும் விதமாகவும் தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்த வருடம் தொடங்கியதில் இருந்து இதுவரை 10 முறை ஏவுகணை சோதனைகளை வடகொரியா நடத்தியுள்ளது.

இதில் கடைசியாக நடத்தப்பட்ட ஏவுகணை சோதனை தோல்வியில் முடிந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையிலே மீண்டும் வடகொரியா பீரங்கிக் குண்டுகளை வீசி சோதனை நடத்தியுள்ளது.

வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் தொலைதூர பாலிஸ்டிக் ஏவுகணையை முழுமையாக சோதிக்க தயாராகி வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிகால் அமைப்புக்களைப் பயன்படுத்தி நீர் விரயமாவதைத் தடுக்கலாம்

## சர்வதேச நீர் தினத்தில் விரிவுரையாளர் பிரதீபராஜா

(வவுனியா)

நீர் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்தி கொள்வதன் மூலம் நிலைத்து நிற்கக்கூடிய நீர்வளத்தை பெற்றுக் கொள்ள கூடிய மக்களாக வடக்கு மாகாண மக்கள் மாற முடியும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற் துறையின் முதுநிலை விரிவுரையாளரான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீர் தினம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், உலகம் முழுவதுமே நீர் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கி இருப்பதன் காரணமாக பெரும்பாலான மக்கள் இந்த நீர் தினத்தை ஆண்டுதோறும் மார்ச் 22 ஆம் திகதி கொண்டாடுகிறார்கள்.

இந்த ஆண்டுக்கான பிரதான கருப்பொருளாக தரைக்கீழ் நீர் என்ற தொனிப் பொருளை முதன்மையாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. பொதுவாக இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் இரு வேறுபட்ட நீர் மூலாதாரங்களில் அது தங்கியுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தினுடைய பெரும்பாலான நீர் தேவைகள் அதாவது தனி மனிதனுக்கான நீர் தேவைகள் அனைத்துமே 72 வீதம் தரைக்கீழ் நீரினாலேயே நிரப்பப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்களில் 88 வீதமானவர்கள். பெரும்பாலும் தங்களுடைய கிணறுகளில் அல்லது தங்களுடைய பிரதேசங்களில் இருக்கின்ற தரைக்கீழ் நீரை நம்பியே தங்களுடைய குடிநீர் மற்றும் அன்றாட தேவைகளை நிறைவு செய்கின்றார்கள். நெற் செய்கை நடவடிக்கைகள், கைத் தொழில் நடவடிக்கைகளுக்கு மேற்பரப்பு நீர்நிலைகளான ஆறுகள், குளங்கள், குட்டைகள் போன்றவற்றினை நம்பியே மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அண்மைய ஆண்டுகளில் பூகோள ரீதியில் ஏற்படுத்தப்பட்ட கால நிலை மாற்றத்தின் விளைவாக தரைக்கீழ் நீராக இருந்தாலும், மேற்பரப்பு நீராக இருந்தாலும் சரி மிகப் பெரிய நெருக்கடியை எதிர் நோக்கி இருக்கின்றது.

நீருக்கான கேள்வி அதிகரித்திருக்கின்ற அதே சமயம் நீரினுடைய மீள் நிரப்பும் செயற்பாடுகள் தரைக்கீழ் நீர், மேல் நிரப்பு செயற்பாடுகளாக இருந்தாலும் சரி மிகக் குறைவான அளவில் காணப்படுவதன் காரணமாக நீர் பற்றாக் குறை என்கின்ற ஒரு மிகப் பெரிய நெருக்கடியை வட மாகாணம் எதிர்நோக்குகின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

சரியான வடிகால் அமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் வடிகால்களூடாக நீர் வீண் விரயமாவதை தவிர்த்துக் கொள்ளலாம். மக்களுக்கு நீர் தொடர்பான விழிப்புணர்வு இன்னமும் முழுமையாக எட்டப்படவில்லை.

பெரும்பாலான மக்கள் நீரை வீண் விரயம் செய்கிறார்கள், தவறாக பயன்படுத்துகிறார்கள். தேவைக்கு மேலதிகமாக பயன்படுத்துகிறார்கள், பொருத்தமற்ற காலப்பகுதியில் பயன்படுத்துகிறார்கள். ஆகவே இது போன்ற செயற்பாடுகளை தவிர்த்து நீர் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்தி கொள்வதன் மூலம் ஒரு நிலைத்து நிற்கக்கூடிய நீர்வளத்தை பெற்றுக் கொள்ள கூடிய மக்களாக வடக்கு மாகாண மக்கள் மாறலாம் என மேலும் தெரிவித்தார். (299)



யாழ் இந்திய துணைத் தூதரகமும், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச சித்த மருத்துவ முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள முருங்கன் டொன் பொஸ்கோ ரெக் மண்டபத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன், வட மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் வைத்தியர் திருமதி ஜொபநாம கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:- ஜோசப் நயன்)

## 29கி.மீ தூரத்தை நீந்திக் கடந்த மாற்றுத் திறனாளியான சிறுமி



(மன்னார்)

மும்பையைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தலை மன்னார் முதல் தனுஷ் கோடி அரிச்சல் முனை வரையிலான பாக் ஜலசந்தி கடல் பகுதியை 13 மணி 10 நிமிட நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

மும்பையில் உள்ள இந்திய கடற்படை நிலையத்தில் பணி புரியும் மதன் ராய். அவரது மனைவி ரெஜினா ராய். இவர்களது மகள் ஜியாராய் (வயது-13). குறித்த சிறுமி ஜியாராய் ஆட்டிசம் ஸ்பெக்டரம் பாதிப்பிற்குள்ளானவர். மேலும் இச் சிறுமி வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளி. இந்த நிலையில் இலங்கையின் தலை மன்னார் முதல் தனுஷ் கோடி அரிச்சல் முனை வரை 29 கிலோ மீட்டர் தொலைவுள்ள பாக் ஜலசந்தி கடற் பகுதியை நீந்தி கடப்பதற்காக இந்திய-இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் இலங்கையிலுள்ள தலை மன்னாரிலிருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். இலங்கை கடற்படையின் ரோந்து படகு சர்வ தேச எல்லை வரையிலும், இந்திய கடல் பகுதியில் மெரைன் பொலிஸார் மற்றும் இந்திய கடலோர காவல்படையின் கப்பலும் பாதுகாப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(5-6-285-100)

## பேருந்து -ஆட்டோ விபத்து



(முறிகண்டி)

கிளிநொச்சி நகரின் ஏ9 வீதியில் விபத்து ஒன்று நேற்று பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணிகளுடன் பயணித்த அரச பேருந்தும் அதே திசையில் பயணித்த முச்சக்கர வண்டியும் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் முச்சக்கர வண்டி பலமாக சேதம் அடைந்துள்ளதுடன், அதில் பயணித்த இருவர் சிறுகாயங்களிற்கு உள்ளாகினர்.

விபத்து தொடர்பாக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-100)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 350 | 400 |
| தக்காளி | 180 | 120 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 80 | 100 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 200 | 140 | 250 | 250 |
| பூசணி | 60 | 80 | 70 | 60 |
| புடோல் | 150 | 150 | 150 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 140 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 150 | 180 |
| பாகற்காய் | 300 | 300 | 350 | 350 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 200 |
| லீக்ஸ் | 140 | 100 | 150 | 160 |
| பீற்றூட் | 140 | 150 | 140 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1200 | 1400 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | - | 200 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 140 | 200 | 240 |
| வெங்காயப்பூ | - | 160 | 140 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 70 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 15 | 20 | 40 |
| ஈரப்பலா | - | 110 | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 21.03.2022-07.10.2023

## சுபச் செலவுகளும் மங்கல நிகழ்ச்சிகளும் இல்லத்தில் நடைபெறும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் வரை)**

**பெயரின் முதல் எழுத்துக்கள்: சு, சே, சோ,ல, லி, லு, லே, லோ, அ உள்ளவர்களுக்கும்**

**இராசிக்கு வருகிறது ராகு யோசித்துச் செயற்பட்டால் வெற்றி**

**மேஷ இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் உங்கள் இராசியிலேயே பிரவேசிக்கப் போகிறார். அதேநேரத்தில் சப்தம ஸ்தானத்திற்கு கேது வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் இந்த இடத்தில் சஞ்சரித்து, நட்சத்திரப் பாதசாரங்களில் பவனி வரும்பொழுது அதற்கேற்ப பலன்களை வழங்குவார்கள்.

**ஜென்ம ராகு, சப்தம கேது**

கடந்த 1½ ஆண்டாக, உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு, இப்பொழுது ஜென்ம இராசிக்கு மாறுகிறார். அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரித்த கேது, சப்தம ஸ்தானத்திற்கு பெயர்கிறார். எனவே சுபச்செலவுகளும் மங்கல நிகழ்ச்சிகளும் இல்லத்தில் நடைபெறும்.

**சூரிய சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். உங்கள் இராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சூரியன் என்பதால், தொழில் வெற்றி நடைபோடும். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார நிலை சீராகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளும் உடன் இருப்பவர்களும் உதவிகரமாக இருப்பர். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, அதிக விழிப்புணர்ச்சி தேவை. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். மருத்துவச் செலவு கூடும். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகும். உணர்ச்சிவசப்படாமல் நிதானத்துடன் செயற்படுவது நல்லது.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம் (21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் தவிர்க்க முடியாததாக அமையும். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் உறுதியாகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். பயணங்கள் அதிகரிக்கும். பூர் வீகச் சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம் (26.9.2022 முதல் 3.6.2023 வரை)**




சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். இல்லம் கட்டிக் குடியேறுதல் அல்லது இல்லம் வாங்கிக் குடியேறுதல் போன்ற நல்ல சம்பவங்கள் நடைபெறலாம்.

ஒரு சிலருக்கு ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். கொடுக்கல் - வாங்கல்கள் தாராளமாக இருக்கும்.

வியாபாரத்தில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொடுப்பர். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானம் வந்து சேரும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் இரண்டு முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகிறது. ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை பலத்தால் ஆரோக்கியம் சீராகும்.

ஆதாயம் தரும் தகவல்கள் ஏராளமாக வந்து சேரும். 22.4.2023 அன்று மேஷத்திற்கு குரு பெயர்ச்சியாகிறார். இதனால் 'குரு மங்கல யோகம்' உருவாகும். அரைகுறையாக நின்ற காரியங்கள் அனைத்தும் நடந்தேறும். குருவின் பார்வை பலத்தால் பிள்ளைகளுக்கு வேலையும், மலர் மாலையும் கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

16.3.2023 அன்று கும்ப இராசிக்கு, சனி பகவான் பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு லாப ஸ்தா னாதிபதியான சனி, லாப ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பது யோகம்தான். பொருளாதாரத்தில் உச்ச நிலை உருவாகும். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்திலேயே செய்து முடிப்பீர்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு-கேது பெயர்ச்சியில், உங்களுக்கு ஜென்ம ராகுவாக அமைவதால் எதையும் யோசித்துச் செய்வது நல்லது. கொடுக்கல்-வாங்கலில் கவனம் தேவை. சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு ஓரளவு படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும்.

உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கும் யோகம் கைகூடும். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். பணி புரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கலாம். மாரியம்மன் வழிபாடு மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## அறிவு வந்தது

சிவகிரி ஜமீன்தார் மிகவும் நேர்மையானவர். அவர் தம் ஜமீன் வேலைகளைக் கவனிக்க நான்கு முக்கிய அதிகாரிகளை நியமித்திருந்தார். ஒவ்வொரு அதிகாரியின் கீழ் இருபத்தைந்து பேர் பணி புரிந்தனர். முக்கிய அதிகாரிகள் தம் கீழ் பணிபுரிபவர்களை ஜமீன் வேலைகளைச் செய்யவிடாமல் தம் சொந்த வேலைகளைச் செய்து கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்ற புகார் ஜமீன் தாரருக்கு வந்தது.

ஜமீன்தாரர் அது பற்றி விசாரித்து அக் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக தெரிந்து கொண்டார். அந்த நான்கு அதிகாரிகளையும் வேலையிலிருந்து நீக்க அவர் நினைத்துத் தம் தாயாரிடம் அதைக் கூறினார். அவளோ "அவசரப்பட்டு எதையும் செய்யாதே. அவர்கள் நீண்ட காலமாக வேலையில் இருப்பவர்கள். உன் தந்தையின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்" என்றாள்.

ஜமீன்தாரர் சற்று யோசித்தார். உடனடியாக அவர்களை வேலையிலிருந்து நீக்காமல் அவர்களைக் கூப்பிட்டு "நம் ஜமீன் வேலைகள் எல்லாம் சுறுசுறுப்பாக நடக்கவில்லை போலிருக்கிறதே. உங்கள் கீழ் பணிபுரிபவர்கள் சரிவர வேலை செய்கிறார்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் பணிவுடன் "எல்லோரும் சரியாகப் பொறுப்புடன் தான் வேலை செய்கிறார்கள். ஆனால் நாளுக்கு நாள் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் அதிகரித்துக் கொண்டே போவதால் மேலும் சிலரை வேலைக்கு அமர்த்திக் கொண்டால் எல்லா வேலைகளையும் விரைவில் செய்து முடிக்கலாம்" என்றார்கள். புவனகிரியில் ஜமீன்தாரரின் தாத்தா நூறு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார். அவர் பெயர் ஞானசேகரர். நல்ல அறிவாளி. அவரிடம் தம் பிரச்சினையைக் கூறி யோசனை கேட்பது என முடிவு செய்து சிவகிரி ஜமீன்தாரர் புவனகிரிக்குச் சென்றார்.

ஞானசேகரும் ஜமீன்தாரரை வரவேற்று நலன் விசாரித்தார். ஜமீன்தாரரும் தம் பிரச்சினையை அவரிடம் "இதற்கு என்ன செய்யலாம்? சில சமயங்களில் எதற்கு இந்தத் தொல்லை, சந்நியாசியாகப் போய்விடலாமா? என்று நினைக்கிறேன்" என்றார்.


அது கேட்டு ஞானசேகரர் "மனிதன் என்றாலே பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும். சந்நியாசியாகி விட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடுமா? எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க வேண்டும். என் விவசாயப் பிரச்சினைகளை எல்லாம் என் மகன் தீபன்தான் சமாளிக்கிறான். அவன் மிகவும் கெட்டிக்காரன்" என்றார்.

அப்போது சிவகிரி ஜமீன்தாரர் "அப்படியானால் தீபனை என்னோடு அனுப்புங்கள். அவன் சிவகிரிக்கு வந்து என் பிரச்சினைக்குத் தீர்வு காணட்டும்" என்றான். ஞானசேகரரும் தீபன் உன் பிரச்சினைக்கு வழி காண்பான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஆனால் அவனுக்கு தற்பெருமை அதிகம். அதனால் தலை கால் தெரியாமல் தான் ஒரு பெரிய மேதை என்று எண்ணித் துள்ளுகிறான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்



"அது மட்டும் அன்று; விதியின் செயல் இது, சாபத்தின் விளைவு இது; நான் செய்த பாவத்தின் பரிகாரம்" என்று பழைய நிகழ்ச்சி ஒன்றை அவளுக்கு எடுத்துக் கூறினான். "இது உனக்குத் தெரியாது; அரசன் நான்; அதனால்; காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேட்டையாடச் சென்றேன்; அங்கே ஒரு யானை தட்டுப்பட்டது; அதனைக் கண்ணால் காணவில்லை; யானை நீர் குடிக்கும் அரவம் கேட்டேன்; ஒலி வருவழி கொண்டு நோக்கினேன்."

"கூர்த்த செவிப்புலன் படைத்த யான், தவறி விட்டேன்; குருடன் ஆகிவிட்டேன்; அது யானை எழுப்பிய ஒலியன்று; ஓர் இளைஞன் பானை எழுப்பியது நீர் மொள்ளும் முடுமுடுப்பு அது. அம்பு பட்டு அவன் அலறி விழுந்தான்; அலறல் கேட்டு ஓடினேன்; அவனைத் தேடினேன்; வாடினேன்."

"ஐயா! நான் அந்தணச் சிறுவன்; விழி இழந்தவர் என் பெற்றோர்; அவர்களுக்கு வழிகாட்டி அழைத்து வந்தேன் யான்; நீர் வேட்கையால் அவர்கள் தவித்தனர்; அதனால், இங்கு முகக்க வந்தேன்; நீ என் உயிரை முகந்துவிட்டாய்".

"ஐயா! எனக்கு நீர் ஓர் உதவி செய்துதர வேண்டும்; இந்தத் தண்ணீர் மிடாவை அவர்களிடம் தந்து குடிக்கச் செய்; என் இறுதி அஞ்சலியை அவர்களுக்கு அறிவித்து விடு" என்றான். அம்முதியவருக்குப் பருக நீர் கொண்டு சென்றேன்; அவர்கள் மனம் உருக, "மகனே வருக! நீர் தருக" என்று குழைந்து பேசினர்.

"கரம் நீட்டினேன்"

"உன் உரம் எங்கே?" என்று என்னைத் தழுவினர்.

"என் தரம் அவர்களுக்கு அறிவித்தேன்"

"இப்பொழுதே விழி இழந்தோம்" எல்லு கதறினர்.

"நான் நாட்டு மன்னன்" என்றேன்.

கேட்டு அவர்கள் மன்னிக்கவில்லை; "நீயும் எம்மைப் போல் மகனைப் பிரிந்து தவிப்பாய்" என்றனர். அவர்கள் சாபத்தால் எனக்கு ஓர் நன்மையும் ஏற்பட்டது. 'மகன் எனக்குப் பிறப்பான்' என்ற நம்பிக்கையை அந்தச் சாபம் தந்தது.

மகனைத் தேடி அவர்கள் மயானம் அடைந்தனர்.

"சிதையில் மூவர் உடலையும் வைத்து எரித்தேன்"

"அதே நிலை எனக்கு வந்துதான் தீரும்; மகனைப் பிரிந்தேன்; என் உயிர் என்னை விட்டுப் பிரியும்" என்றான்.

மன்னன் மரணத்தால் ஏற்படும் அவலம்; மகனைப் பிரிந்ததால் ஏற்படும் துயரம்; "அவன் அவலத்துக்கு அழுவதா? மகன் பிரிவுக்குப் புலம்புவதா?" என்று அவள் அழுகைக்கே அர்த்தம் தெரியவில்லை. இராமன் பிரிவு நாட்டு மக்களை அழுகையில் ஆழ்த்தியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் என்ற சொல் இறு என்று பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள் களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின் றான். – ஆன்மீக நோக்கு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆகுங்காலத்தே அவையவை ஆகும் போகும் காலத்தே எல்லாம் போகும்

நாடு கந்தறுந்துவிட்டது. இதில் இருந்து மீள்வதாயின் ஆட்சி மாற்றமே ஒரே வழி.

எனினும் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டுமாயின், அதற்குப் பெளத்த பீடங்களின் ஆதரவு கட்டாயத் தேவையாக இருக்கும்.

ஆயினும் ஆட்சி மாற்றத்தை பெளத்த பீடங்கள் ஒருபோதும் விரும்பப்போவதில்லை.

அதாவது ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சி வீழ்ந்து போகுமாயின், அதன் பின்னர் அவர்களால் எழவே முடியாது.

தவிர, தமிழ் மக்களுக்கு எதிராகக் கொடும் போர் நடத்திய ராஜபக்ஷ தரப்பை; சிங்கள மக்கள் ஆட்சியில் இருந்து வெளியேற்றி விட்டனர் என்ற இழுக்கும் மகாவம்சத்தின் பின்னிணைப்பாகிவிடும்.

எனவே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல என்று பெளத்த மகா நாயக்க பீடங்கள் கருதுகின்றன.

இதனை மேலும் விதந்து கூறுவதாயின், ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சி கவிழுமாயின், அது தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமையும் என்ற கருத்தியலை முன்வைத்து ஆட்சி மாற்றத்துக்குத் தடுப்பணை கட்டுவதில் பெளத்த பீடங்கள் இறங்கியுள்ளன.

இங்குதான் ஓர் உண்மையை பெளத்த துறவிகளால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

அதாவது, ஆட்சி மாற்றம் ஏற்படத் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் இலங்கைத் தீவு மிகப்பெரும் பஞ்சத்தை நோக்கி வேகமெடுக்கும்.

இந்தப் படுமோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையானது நாட்டில் கொள்ளை, களவு, சண்டை, கூலிக்கொலைகள், ஆட்கடத்தல்கள் என ஏகப்பட்ட சட்டவிரோத செயல்களை மலியச்செய்யும்.

இந்நிலைமை உச்சமடையும்போது, பொலிஸார் மற்றும் படையினரால் எதுவும் செய்ய முடியாத கையறுநிலை உருவாகும். அதிலும் தனித்து தமிழ் மக்களின் போராட்டங்களைத் தடுப்பதிலும் மாவீரர் தினத்தில் விளக்கேற்றாமல் தடுக்கும் பொருட்டு தமிழர் தாயகத் தின் முக்கிய இடங்களில் காவல் செய்வதை யும் தொழிலாகக் கொண்ட பொலிஸாருக்கு, கொள்ளையைத் தடுப்பதும் திருட்டை நிறுத்துவதும் கூலிக்கொலைகளை முற்றாகத் தவிர்ப்பதும் முடியாத காரியமே.

இதைத் தவிர, நாட்டின் பொருளாதாரப் பஞ்சத்தில் காவல்துறையினரின் குடும்பங்களும் கதிகலங்கி நிற்க,

இலஞ்ச ஊழல் எனும் பெரும் பூதம் காவல்துறை நிலையங்களில் இருந்து மக்கள் சமூகத்தை நோக்கி வந்தாகும்.

இதன் பின்னர் ஆட்சி மாற்றம் நடந்தாலும் வேலையில்லை என்பதாக நிலைமை முடிந்து போகும்.

ஆம், கவியரசர் கண்ணதாசன் கூறியது போல, ***ஆகுங்காலத்தே அவையவை ஆகும். போகுங்காலத்தே பொன், பொருள், புகழ் எல்லாம் போகும்.***

போகுகின்ற காலம் இலங்கைக்கு வந்தாயிற்று. இனி இதனை நடத்திமுடிக்கின்ற விதியை பெளத்த பீடங்களே செய்தாகும்.

இதைத்தான் நாம், இறைவனின் திருவிளையாடல் என்று சொல்லுகின்றோம்.

## நாட்டில் இன்றைய தினமும் மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

நாட்டில் இன்றைய தினமும் மின்வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

மின்வெட்டினை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு தேசிய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி P,Q,R,S,T, U,V,W வலயங்களுக்கு காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை 2 மணி 40 நிமிடங்களும் மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை 1 மணிநேர மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை A,B,C, D,E,F,G,H,I,J,K,L வலயங்களுக்கு காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை 3 மணி 20 நிமிடங்களும் மற்றும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரை 1 மணி நேரம் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

## சம்மாந்துறையில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

சம்மாந்துறை வயல் பகுதியில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளாறு மயில்லோடை வயல் பிரதேசத்தில் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நேற்று மதியம் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிர் இழந்தவர் சம்மாந்துறை விளினையடியைச் சேர்ந்த 68 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தை ஆவார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், சமணங்குளம், மறக்கநம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் 18 வது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்- தேவிபுரம், 68 ம் பிரிவு இராணுவ முகாம்-இரணைப்பாலை, 68வது பிரிவு-டயலொக் கோபுரம்-இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஆலயத்திற்கு சென்ற வயோதிபத் தாயின் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரசித்திபெற்ற தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற வயோதிபத் தாய் ஒருவரின் ஒன்றே முக்கால் பவுண் தங்கச் சங்கிலி நாசூக்காகத் திருடப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி வயோதிபத் தாய் தனது மகனுடன் ஆலயத்திற்குச் சென்ற நிலையில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தபோது கழுத்தில் அணிந்திருந்த அவரது தங்கச் சங்கிலி திடீரெனக் காணாமல் போயுள்ளது. (ம-18)

## கொரோனா; 5 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 5 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,436ஆக அதிகரித்துள்ளது. (ம)

## சர்வகட்சி மாநாட்டை தமிழ் முற்போக்கு கூட்டணியும் புறக்கணிப்பு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணியும் தீர்மானித்துள்ளது.

பொருளாதார துறையில் மட்டுமல்லாது, சகல துறைகளிலும் நாடு பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ள பின்னணியில், சர்வகட்சி மாநாட்டில் கலந்துக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை கவனமாக பரிசீலித்து, இம்மாநாட்டில் கலந்துக்கொள்வதில்லை என தீர்மானிக்கப்பட்டதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதனை அரசாங்கத்தின் தோல்வியை எதிரணியின் தலைகளில் சுமத்துவதற்கான முயற்சியாகவும் அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை திருப்திப்படுத்த அரசாங்கம் செய்யும் முயற்சியாகவும் கருதுவதாக மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### வாழ்க்கை எனும் பெருங்கடலைக் கடக்க

❖ சிறிது நேரமே ஆனாலும் கூட தூயவர்களுடன் கொள்ளும் தொடர்பு வாழ்க்கைப் பெருங்கடலைக் கடக்க உதவுகிறது. தொடர்பின் ஆற்றல் இத்தகையது.

❖ 'ஓம்' என்பதை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதும், அதன் பொருளைச் சிந்திப்பதும் உங்கள் மனத்துடனேயே நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் சிறந்த தொடர்பாகும்.

❖ கற்றுக் கொள்ளுங்கள்,கற்றதைச் சிந்தியுங்கள்,இவ்வாறு நீங்கள் ஒளி பெறுவீகள். ஆன்மா வெளிப்பட்டுத் தோன்றும். 'ஓம்' என்பதைச் சிந்திக்க வேண்டும். அதனுடன் அதன் பொருளையும் சிந்தியுங்கள். தீயவர்களின் தொடர்பை விலக்குங்கள். ஏனென்றால் பழைய தழும்புகள் போல் தீய செயற்பாடுகள் ஏற்கெனவே உங்களிடம் இருக்கின்றன. அவற்றை வெளிப்படுத்துவதற்கான தூண்டுதலே தீயவர் தொடர்பு.

❖ அதே போல் நல்லோர் தொடர்பும் நம்மிடம் உள்ள நல்ல செயற்பாடுகளை வெளிப்படுத்தும் என்று சொல்லப்படுகிறது. நல்லோர் தொடர்பைப் போல் புனிதமானது இந்த உலகில் வேறொன்றும் இல்லை. அது நல்ல செயற்பாடுகளை மேலே கொண்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 25

**முழு மாத்தளை மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 9.2 % இலும் மற்றும் 9.8 % இலும் உள்ளதை குழு அவதானித்தது. மாத்தளை, ரத்தோட்டை, உக்குவளை பிரதேசங்களை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்ய முடியவில்லை. இதற்கான காரணம் இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு தேவையான சனத்தொகையில் அவர்களின் தொகை 35% இலும் குறைவாக இருந்ததே.**

சுருக்கமாக கூறினால் 5 பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 4 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 2 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு −5.2% மற்றும் + 1.4% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து மாத்தளை மாவட்டம் 6 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது. அத்தொகுதிகள் தம்புள்ள (67), நாவுல (140), கலேவெல (83), மாத்தளை (66), ரத்தொட்ட (79), உக்குவெல (110) ஆகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (e2) இல் காட்டப்பட்டுள்ளது.

### நுவரெலியா மாவட்டம் பற்றிய தகவல்கள்

நுவரெலியா மாவட்டம் வடக்கு அகலாங்கு 6°45' மற்றும் 7°16' இற்கும் கிழக்கு நெட்டாங்கு 80°25' மற்றும் 81°57' இற்கும் இடையில் 1,741 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது. மத்திய மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 30.7% வியாபித்துள்ளது. அது 1,706 சதுர கி.மீ. நிலப் பரப்பையும் 35 சதுர கி.மீ. உள்ளக நீர்ப் பரப்பையும் கொண்டுள்ளது. மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 2.0% நீர்த் தேங்கங்களைக் கொண்டுள்ளது.

வடக்கு திசையில் கண்டி மாவட்டத்தையும் தெற்கு திசையில் இரத்தினபுரி மாவட்டத்தையும் கிழக்குத் திசையில் பதுளை மாவட்டத்தையும் மேற்குத் திசையில் கேகாலை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு காணப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் படி இந்த மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 26.2% அதாவது 457 சதுர கி.மீ. வனப் பிரதேசமாக காணப்படுகின்றது. இந்த மாவட்டம் கடல் மட்டத்திற்கு மேல் 70 மீற்றர் தொடக்கம் உச்சமாக 2530+ மீற்றர் வரையில் நிலப் பரப்பு வேறுபட்டு செல்கின்றது.

**மத்திய மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 30.7% வியாபித்துள்ள நுவரெலியா மாவட்டம் 1,706 சதுர கி.மீ. நிலப் பரப்பையும் 35 சதுர கி.மீ. உள்ளக நீர்ப் பரப்பையும் கொண்டுள்ளது. மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 2.0% நீர்த் தேங்கங்களைக் கொண்டுள்ளது.**

சனத்தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பின் (2012) படி மத்திய மாகாணத்தின் சனத்தொகையில் 711, 644 பேர் நுவரெலியா மாவட்டத்தில் வசிக்கின்றனர். ஒரு சதுர கி.மீற்றருக்கான சனத்தொகை அடர்த்தி 417 ஆகும். இந்த வருடத்தில் 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 90.9% ஆகும். கொழும்பிலிருந்து 102 கி.மீ.நேரடித் தூரத்தில் அமைந்துள்ள வெளிச்ச நகரமான நுவரெலியா, இம் மாவட்டத்தின் தலைநகரமாகும். இலங்கையின் உயரமான மலையான பீதுருதாலகால மலை உச்சி தெரியும் வகையில் இந்த நகரம் அமைந்துள்ளது. மாவட்டத்தின் மொத்த வீதிகளின் நீளம் 1,097 சதுர கி.மீ. ஆகும். 2016 ஆம் ஆண்டு மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (66%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (22%) மற்றும் கைத்தொழிற்துறையில் (12%) ஆகும்.


**வடக்கு திசையில் கண்டி மாவட்டத்தையும் தெற்கு திசையில் இரத்தினபுரி மாவட்டத்தையும் கிழக்குத் திசையில் பதுளை மாவட்டத்தையும் மேற்குத் திசையில் கேகாலை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு நுவரெலியா மாவட்டம் காணப்படுகின்றது. சனத்தொகை கணக்கெடுப்பின் (2012) படி ஒரு சதுர கி.மீற்றருக்கான சனத்தொகை அடர்த்தி 417 ஆகும்.**

### நுவரெலியா மாவட்டம் இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை (f1) இல் காட்டப்பட்டுள்ளது. பெரும்பான்மை இனமாக இந்தியத் தமிழர்கள் (53.1%) காணப்படுகின்றனர். அவர்களுள் இந்துக்கள் (51%) காணப்படுகின்றனர். அடுத்ததாக சிங்களவர்கள் (39.6%) மற்றும் பௌத்தர்கள் (39.1%) காணப்படுகின்றனர். அதன் பின்னர் 2.5% இலங்கை முஸ்லிம்களும் 3.0% இஸ்லாம் மதத்தினரும் காணப்படுகின்றனர். அடுத்ததாக கத்தோலிக்கர்கள் 4.7% ஆகும். 2.2% ஏனைய கிருஸ்தவ பிரிவுகளைச் சேர்ந்தவர்களாவர்.

அட்டவணை (e2) -மாத்தளை மாவட்டதேர்தல்தொகுதிகளும்சனத்தொகையும்

| தேர்தல்தொகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தம்புள்ள | 78603 | 889 | 2253 | 39 | 81784 |
| நாவுல | 78360 | 2360 | 395 | 12 | 81127 |
| கலேவெல | 69728 | 1510 | 10203 | 49 | 81490 |
| மாத்தளை | 53556 | 9588 | 18265 | 448 | 81857 |
| ரத்தொட்ட | 51736 | 25098 | 4623 | 240 | 81697 |
| உக்குவெல | 59322 | 8072 | 9047 | 135 | 76576 |
| மாத்தளை மாவட்டம் | 391305 | 47517 | 44786 | 923 | 484531 |



மாத்தளை மாவட்டம் பிரதேச செயலகங்கள்

அட்டவணை (f1)

இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு – நுவரெலியா மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | மதம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | 282,053 | 39.6 | பௌத்தம் | 278,254 | 39.1 |
| இலங்கைத் தமிழர் | 32,563 | 4.6 | இந்து | 363,163 | 51.0 |
| இந்தியத் தமிழர் | 377,637 | 53.1 | இஸ்லாம் | 21,116 | 3.0 |
| இலங்கை முஸ்லிம் | 17,652 | 2.5 | உரோமன் கத்தோலிக்கம் | 33,476 | 4.7 |
| வேறு | 1,739 | 0.2 | வேறு கத்தோலிக்கம் | 15,508 | 2.2 |
| | | | வேறு | 127 | 0.0 |
| மொத்தம் | 711,644 | 100 | மொத்தம் | 711,644 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## த.தே.கூ...

மன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல்வாதிகள் ஓர் அணியில் திரண்டு எமக்காக பேச வேண்டும். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதியை சந்திக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளதாக நாங்கள் அறிகிறோம். அதனை அவர்கள் புறக்கணிக்க வேண்டும் என கோருகிறோம்.

அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ள இந்த நிலையில் அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதனைவிட இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி எமக்கான உரிமைகளையும் எமக்கான நீதியையும் பெற அவர்கள் அணிதிரள வேண்டும்.

ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்வார்கள் ஆயின் அது எமக்கு இழைக்கப்படும் அநீதி மாத்திரமல்ல, துரோகமும் கூட என மேலும் தெரிவித்தார். (ம-33)

## எதிர்பார்க்காத...

தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்,

அதனை மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை அல்லது நாளை மறுதினம் அளவில் மின்கட்டணம் அதிகரிக்கப்படும்.

25 முதல் 50 சதவீதத்தினால் கட்டணம் அதிகரிக்கப்படுமா? என்பது குறித்து தெரியவில்லை.

கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கு அமைய, மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைப்படி, முன்னர் காணப்பட்டதை விடவும் 500 சதவீதத்தால் அதிகரிக்கும்.

மின்சாரத்தை பயன்படுத்தாது எதிர்வரும் நாட்களில் மின்குமிழ் மற்றும் மின்விசிறி என்பவற்றை பார்த்து கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த இலங்கை மின்சார சேவையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால், மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் தற்போது மின்சார சபை பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக குறிப்பிட்டார். (ம)

## பொருளாதார...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சி.வி.விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு செலவினங்களை குறைத்துக் கொள்ளாத வரையில், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தணிக்க முடியாது என்றும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றும் சி.வி.விக்னேஸ்வரன் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் தினங்களில் சர்வகட்சி மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்பதையும் அறிவித்துள்ள சி.வி.விக்னேஸ்வரன், அரசாங்கம் தமது கொள்கைகளை சீராக்கி சரியான தீர்மானங்களை எடுத்து, சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை வழங்க முன்வந்தால், அரசாங்கத்துக்கு தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## அரசுக்கு வாக்...

கின்ற நிலையில், மக்கள் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக நாளாந்தம் வரிசையில் காத்திருக்கின்றனர்.

சில பிரதேசங்களில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகிலும் சமையல் எரிவாயு விற்பனை நிலைய வளாகங்களிலும் இரவிரவாக மக்கள் காத்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு நேற்று கொழும்பு - ஒருகொடாவத்தை பிரதேசத்திலுள்ள லாஃப் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக பல மணித்தியாலங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த போதிலும், அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாமையால் வரிசையில் காத்திருந்த மக்கள் வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு தேவையான மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் என்பவற்றை வழங்கும் வரையில் அவ்வழியூடான போக்குவரத்திற்கு இடமளிக்கப் போவதில்லை என்று மக்கள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக அந்த வழியூடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

இவ்வாறு வரிசையில் காத்திருந்த மக்கள் ஊடகங்களிடம் தமது விசனத்தை வெளிப்படுத்துகையில்,

"நான் உழைத்து தான் குடும்ப பொருளாதார சுமையை சுமக்கின்றேன். இன்று மண்ணெண்ணெய்யை பெற்றுக் கொள்வதற்காக ஒரு நாள் விடுமுறையில் வந்து வரிசையில் காத்திருக்கின்றேன். ஆனால் மண்ணெண்ணெய் இல்லை என்று கூறுகின்றனர்.", "அரசுக்கு வாக்களித்த நாம் இறுதியாக வீதியில் அநாதரவாகியுள்ளோம்" என்று குறிப்பிட்டனர். (ம)

## சாரதி...

இல்லத்தில் வைத்து இனந்தெரியாத சிலரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணத்தைக் கண்டறிய கெஸ்பேவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சர் காமினி லொக்குகே நடைமுறை அரசில் மிகவும் செல்வாக்கு மிக்க பலம் பொருந்திய அமைச்சராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தேசிய கொள்கை...

மல்வத்து பீடத்தின் மகாநாயக்க வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வண.வரகாகொட ஞானரதன தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேசிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியதன் அவசியத்தை மகாநாயக்க தேரர்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளின் பட்டியலின்படி, அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மாதிரியை உருவாக்குதலும் ப்ரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்திக்கு, விவசாயத்திற்கு மற்றும் விவசாய மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், பொருளாதார நெருக்கடிக் காலத்தில் முறையற்ற நிதியீட்டல்களுக்காக அத்தியாவசியமான பொருட்களில் செயற்கையாகப் பற்றாக்குறையை உருவாக்கும் மோசடி வியாபாரிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதலீட்டை ஊக்குவிக்கவும், வெளிப்படையான பொருளாதாரத் திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றத்தை அதிகரிக்கவும், ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் கடிதத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

நாட்டில் புதிய முதலீடுகளை ஊக்குவித்தல், அரச கடனை மறுசீரமைத்தல், குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குதல், வீண் விரயம், ஊழல் மற்றும் வள துஷ்பிரயோகம் ஆகியவற்றைத் தடுக்க நிலையான திட்டத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்காக நடைமுறைப்படுத்திய தூரநோக்குடைய வேலைத்திட்டங்கள் தொடர்பில் முழுநாட்டு மக்களினதும் பாராட்டு மற்றும் மகிழ்ச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கிடைக்கும் என்று மகாநாயக்க தேரர்கள் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

கட்சி பேதமின்றி நாட்டைப் பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பூரண பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அவசியம் என்று தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம)

## ஜனாதிபதி...

றன.

ஆளும் கட்சியைச் சேர்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அவசியம் இதில் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி உள்ளிட்ட பொருளாதார விடயங்கள் தொடர்பில் இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10730)

**குரு - 077 623 4204**

## காணி விற்பனைக்கு

யாழ்.கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கைதடி சந்தியில் இருந்து 600 மீற்றர் தூரம்
- நல்ல சூழலில்
- கைதடி சந்தி பெற்றோல் நிரப்பு நிலையம் (ஏ9 வீதி ) அருகாமை வீதியில்

(10729)

**074 291 3725, 074 291 3726**

## காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் பிரதான வீதியில் (யாழ். -காரைநகர் வீதி) அரசடி பிள்ளையார் கோவில் முன்பாக 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- மானிப்பாய் சந்தையில் இருந்து 1 Km தூரத்தில்
- 14 அடி பாதையுடன்
- பிரதான வீதியில் இருந்து 200 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை 5 இலட்சம் ரூபாய்

(10729)

**074 291 3727**

## மணமகள் தேவை

1967இல் பிறந்த பிரான்ஸ் நாட்டுப் பிரஜாவுரிமையுள்ள திருமணமாகாத நற்பண்புள்ள குருகுல மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. நட்சத்திரம் – கேட்டை 4ம் பாதம் செவ்வாய்/கேது 12இல், லக்கினத்தில் சந்திரன், சனி 5இல் சூரியன், புதன், வியாழன், 9இல் மணமகன் இலங்கை வந்து மணமகளை அழைத்துச் செல்வார். தாரமிழந்தவர்களும் கருத்தில் கொள்ளப்படுவர். (10721)

**தொடர்பு:- 070 253 0305 சகோதரன்**

## நாயைக் காணவில்லை



யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் பிறவுண் நிற நாய் கறுப்பு நிற பட்டி அணிந்தபடி காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10727)

**தொடர்பு:- 077 345 9599 (கிரி)**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10639)

**076 825 7716 (ஆகாஸ்)**

JSAC

## JAFFNA SOCIAL ACTION CENTER

### Vacancy announcement for Administrative Manager

Jaffna Social Action Center (JSAC) is a Sri Lankan Non-Governmental organization providing services throughout the Jaffna Peninsula and the Northern Province. Founded in 2001, we are a special protection NGO that works with the most vulnerable members of society: former IDPs (returnees), women headed families and children in areas of poverty.

JSAC is looking for a young, energetic, dedicated and experienced Administrative Manager.

**Required qualifications, competences/skills and experience:**

- Bachelor degree in management / Business administration or other suitable fields Public Administration and general management.
- At least 3+ years of progressively responsible administrative experience preferably with the Non-Governmental sector or International Organizations.
- Must have interpersonal and team working/administrative and organized skills with ability to remain focused when under pressure with a commitment to work hard and for long hours.
- Strong computer Skills (Ms Office).
- Fluency in English and Tamil both verbally and in writing.
- Good understanding of broader development themes such as Protection, Gender, Child protection, livelihoods, reconciliation and Human rights.
- Ability & willingness to travel project offices and all part of the country is essential.
- Excellent organizational and multitasking abilities.

**Reporting line:** This position will be directly reporting to the Coordinator (Head of the Organization)

Qualified applicants must submit an updated CV including a covering letter in English explaining their interest in the position. Please submit your application along with the following documents.

1. A one page- writing sample that describes what motivates you to work for JSAC.
2. Email & telephone contacts of two professional referees

The recruitment process will consist of interviews, written assessment and 2 days compulsory training.

Individuals of all ethnic background are encouraged to apply. Female candidates are preferable and encourage to apply. The application needs to be submitted directly at the head office or through registered post or e-mail.

**Submission Email:**

Coordinator,
Jaffna Social Action Center,
18/1, Kailasapillaiyar Kovil Road,
Nallur, Jaffna.
jsacjaffna@gmail.com
021 222 3699

**The closing date for applications for the above vacancy is 30th March 2022, at 4:30 PM.**

We thank all applicants but only the short listed candidates will be contacted.

(10729)


# வவுனியாவில் வீதி விபத்து

வவுனியா, புகையிரத வீதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இடம்பெற்ற விபத்து குறித்து மேலும்தெரியவருவதாவது,

வவுனியா, வைரவபுளியங்குளம், புகையிரத வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் ஆதி விநாயகர் ஆலயம் அருகில் சென்ற போது வீதியின்குறுக்காக நாய் சென்றமையால் தனது மோட்டார் சைக்கிளை திடீரென நிறுத்தியுள்ளார்.

இதனால் குறித்த மோட்டார் சைக்கிளின் பின்னால் சென்ற பட்டா ரக வாகன சாரதியும் விபத்தை தடுக்கும் பொருட்டு திடீரென வாகனத்தை நிறுத்தியுள்ளார்.

இதன் போது பட்டா ரக வாகனத்தின் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பட்டா ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-250)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.